| O.S.No. 250/2017 | PW1 : திருமதி. அபிலா பிஜின் எட்வர்ட்<br>த/பெ. திரு. எட்வர்ட் | 13-06-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. 1–ம் வாதி எனது தாயார். அவர் எங்கு வசிக்கிறார் என்றால் தாவா சொத்தில் வசிக்கிறார். 1–ம் வாதிக்கு தற்போது 85 வயதாகிறது. வழக்கு சொத்து சம்மந்தமாக 1–ம் வாதிக்குத்தான் தெரியும் என்றாலும், எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல, வழக்கு சொத்து சம்மந்தமாக என்ன நடந்திருக்கிறது என்று எனக்கு தெரியும். வழக்கு சொத்து செய்யார் வட்டம் தேத்துரை கிராமத்தில் உள்ளது. அதன் மொத்த விஸ்தீரனம் 11 ஏக்கர் 54 சென்ட் ஆகும். நான் சென்னையில் வசித்து வருகிறேன்.

2. எனது தாயார் 2008–ம் வருடம் தாவா சொத்தினை கிரையம் வாங்கினார். வழக்கின் 5–ம் பிரதிவாதியான Western Expresss Private Limited என்ற நிறுவனத்திடமிருந்து எனது தாயார் கிரையம் பெற்றார். தாவா சொத்தினை கிரையம் வாங்கும்போது 5–ம் பிரதிவாதி நிறுவனத்தின்பேரில் உள்ள அசல் ஆவணத்தினை பார்த்து வாங்கினீர்களா என்றால் இல்லை, சான்றிட்ட நகல் பார்த்து வாங்கினேன். அசல் ஆவணத்தை அந்த சமயம் கேட்டீர்களா என்றால் 5–ம் பிரதிவாதி அலுவலகத்தில் உள்ளது என்று சொன்னார்கள், ஆனால் அதனை காண்பிக்கவில்லை. அசல் ஆவணம் 5–ம் பிரதிவாதி அலுவலகத்தில் PF Attach–ல் இருந்ததால் அது முடிந்த பிறகு காண்பிக்கிறேன் என்று சொன்னார்கள். அவ்வாறு பற்றுகையில் இருந்த சொத்தினை கிரையம் வாங்கமுடியாது என்றால் அந்த பற்றுகையை விடுவித்தபின்புதான் நாங்கள் சொத்தினை கிரையம் வாங்கினோம்.

3. PF Attach-ல் இருந்தது என்பதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் வில்லங்கத்தில் PF Attach என்று இருந்தது. அந்த ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியவில்லை. PF Attach இருந்தது என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. தாவா சொத்து 4-ம் பிரதிவாதிக்கு பாத்தியமான சொத்து என்றாலும், அச்சொத்தினை 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதி வங்கியில் ஈடுகட்டி அடமானம் வைத்து ரூ.70 லட்சம் கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. தாவா சொத்து 4-ம் பிரதிவாதிக்கு தனிமையில் பாத்தியமான சொத்து இல்லை. தாவா சொத்தினை 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியின் வங்கியில் 2001-ம் ஆண்டு அடமானம் வைத்தார் என்று சொன்னால் அதைப்பற்றி எங்களுக்கு எந்த தகவலும் சொல்லவில்லை, அதுகுறித்து வில்லங்கத்திலும் வரவில்லை. 2001-ம் ஆண்டு ஈடுகட்டிய அடமானம் வில்லங்கத்தில் வராது என்ற விஷயம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

5. 2-ம் பிரதிவாதி வாங்கிய கடன் சரிவர திருப்பி செலுத்தாததால் 1-ம் பிரதிவாதியின் வங்கியால் 30.06.2003-ல் வாராக்கடனாக வைக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. அதனால்தான், 1-ம் பிரதிவாதி சென்னை DRT தீர்ப்பாயத்தில் கடனை வசூலிக்கும் பொருட்டு 2005-ம் ஆண்டு ஒரு மனு தாக்கல் செய்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் 2008-ம் ஆண்டு தாவா சொத்தினை கிரையம் வாங்கினார். பின்னர் நாங்கள் DRT தீர்ப்பாயத்தில் ஒரு இடைக்கால மனு தாக்கல் செய்து தாவா சொத்தினை நாங்கள் வாங்கிவிட்டோம் என்று தாக்கல் செய்த மனுவானது 1-ம்

பிரதிவாதியின் கடும் ஆட்சேபணையின்பேரில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் உரிமை சார்ந்த பிரச்சனை என்பதால் சிவில் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு தள்ளுபடி செய்தார்கள். நான் சொல்வதுபோல் சிவில் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு எந்தவொரு உத்தரவும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. DRT-ல் 1-ம் பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கு 15-01-2010-ல் 1-ம் பிரதிவாதி எடுத்துக்கொள்ளலாம் என்று தீர்ப்பாகியது என்றால் அதைப்பற்றி எனக்கு பிறகு கூறியதின் அடிப்படையில் தெரியவந்தது. எனக்கு ஏதேனும் பரிகாரம் வேண்டுமென்றால் DRT-ல் வழங்கிய தீர்ப்பின்பேரில் மேல்முறையீடுதான் தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றாலும், இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றாலும் சரியல்ல, நாங்கள் 1-ம் பிரதிவாதியிடம் எந்த கடனும் வாங்கவில்லை, அதனால் மேல்முறையீடு செய்யவில்லை.

7. 1-ம் பிரதிவாதி ஒரு பொதுத்துறை வங்கி ஆகும். 1-ம் பிரதிவாதியிடம் பெற்ற கடனை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் 2 முதல் 4 பிரதிவாதிகளுடன் சேர்ந்துகொண்டு எனது தாயார் தாவா சொத்து அடமானம் இருப்பதை தெரிந்துகொண்டே கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை வாங்குபவர்தான் விழிப்புடன் இருந்து கிரையம் வாங்கவேண்டும் என்றால் நாங்கள் விழிப்போடு இருந்துதான் கிரையம் வாங்கினோம். தாவா சொத்து சம்மந்தமாக சென்னை DRT தீர்ப்பாயத்தில் தீர்ப்பாகியுள்ள நிலையில் இந்நீதிமன்றத்தில் நாங்கள் எவ்வித பரிகாரமும் கோரமுடியாது என்றாலும், அதனால் எங்களுடைய வழக்கு தள்ளுபடி செய்யடவேண்டியது என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**